# கவிமுகி

## பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்

## Kavimugi

International Journal of Tamil Research

அரையாண்டு ஆய்விதழ் (ஆனி, மார்கழி)

அடிப்புற அரங்கச் செயற்பாட்டுப் பேரவை,
ஆலையடிவீதிமேற்கு, வந்தாறுமூலை மட்டக்களப்பு, இலங்கை.

Vol. 1 Iss. 1 / 28 September 2022 / ISSN 2950-6611

ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஆத்துப்பட்டி

வாழிய உலக நல நற்பணி மன்றம், பழனி

அடிப்புற அறங்கச் செயற்பாட்டுப் பேரவை,
இலங்கை

கவிமுகி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

## பண்டைத் தமிழர் பண்பாடு,
## இலக்கியம், ஆற்றுகை மரபுகள்

இடம் :

ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சீவல்சரகு, திண்டுக்கல்மெயின்ரோடு, ஆத்தூர் (தாலுகா)
திண்டுக்கல் - 624303

# கவிமுகி

## பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்

## Kavimugi

International Journal of Tamil Research

அரையாண்டு ஆய்விதழ் (ஆனி, மார்கழி)

அடிப்புற அரங்கச் செயற்பாட்டுப் பேரவை,
ஆலையடிவீதிமேற்கு, வந்தாறுமூலை மட்டக்களப்பு, இலங்கை.

**Vol. 1 Iss. 1 / 28 September 2022 / ISSN 2950-6611**

ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஆத்துப்பட்டி

வாழிய உலக நல நற்பணி மன்றம், பழனி

அடிப்புற அறங்கச் செயற்பாட்டுப் பேரவை,
இலங்கை

கவிமுகி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

# பண்டைத் தமிழர் பண்பாடு,
# இலக்கியம், ஆற்றுகை மரபுகள்

இடம் :

ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சீவல்சரகு, திண்டுக்கல்மெயின்ரோடு, ஆத்தூர் (தாலுகா)

## கவிமுகி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்

அழப்புற அரங்கச் செயற்பாட்டுப் பேரவையினால், அரையாண்டு இதழாக (ஆனி, மார்கழி) வெளியிடப்படும் மீளாய்வுச் (referee) சஞ்சிகையாகும். இது துறைசார் உள்நாட்டு, வெளிநாட்டுப் புலமையாளர்களால் மீளாய்வுச் செய்யப்பட்டு வெளியிடப்படுகின்றது.

*மலர் 01, சிறப்பிதழ் 01, புரட்டாதி, 2022*

*ISSN 2950-6611* விலை ரூபாய் *400*

## *Chief Editors*

### முதன்மை ஆசிரியர்

**முனைவர் வெ.முத்துலட்சுமி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
ஆத்தூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஆத்துப்பட்டி, திண்டுக்கல், தமிழ்நாடு.

**திரு. சு.சந்திரகுமார்**
முதுநிலை விரிவுரையாளர்
நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

## *Editorial Board*

### ஆசிரியர் குழு

**Selvajothi Ramalingam**
Senior Lecturer
Malaysian Languages and Applied Linguistics
Faculty of Languages and Linguistics
Universiti Malaya
50603 Kuala Lumpur
Malaysia

**Dr Seetha Lakshmi**
Associate Professor Asian Languages and Cultures
National Institute of Education, Nanyang Technological University

கவிமுகி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்
Kavimugi International Journal of Tamil Research
மலர் 01, சிறப்பிதழ் 01ISSN 2950-6611

# பாலை நிலத்தொழிலும் வழிபாடும்

**த. நர்மதாதேவி,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
என்.ஜி.எம் கல்லூரி
பொள்ளாச்சி-642001,தமிழ்நாடு, இந்தியா.

## ஆய்வுச் சுருக்கம்

பாலைநிலத்தொழிலும் வழிபாடும் என்ற இவ்வாய்வில் பாலைநிலம் உருவான நிலையினை அறிஞர்களின் சான்றுகளோடு ஆராய்ந்து, பின் ஒவ்வொரு தொழிலுக்கும், நிலமும் பருவகாலமே இன்றியமைவதாக உள்ளது. அதேபோல பாலைநிலத் தொழிலுக்கும் நிலப்பாங்கு அடித்தளமாக விளங்குகிறது. அவ்வகையில் இந்நிலத்தொழிலான களவுத் தொழிலையும், கொலைத் தொழிலையும், பின்னர் அந்நிலத்திற்குரிய தெய்வமாக விளங்கும் கொற்றவை வழிபாடு குறித்தும், பின்னர் பாலை நிலவழியில் காணப்படும் நடுகல் வழிபாடு குறித்தும் ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

## பாலை நிலம்

தமிழகத்தின் எல்லையைக் கூறுகையில் "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்தமிழ் கூறும் நல்லுலகம்" என்கிறார் தொல்காப்பியத்திற்கு பாயிரம் எழுதிய பனம்பாரனர். தமிழகத்தின் நிலங்களை தொல்காப்பியர் கூறுகையில் நானிலங்களையே கூறுகிறார் வம்புலமாகிய குறிஞ்சியும் முல்லையும் வேனிற் காலத்தில் பாலைநிலம் போல காட்சியளிக்கும் என்பதனை,

> **"குறிஞ்சியும் முல்லையும் முறைமையிற் திரிந்து**
> **நல்லியல்பு இழந்து,வியனிலம் போல**
> **பாலைஎன்பதோர் படிமம் கொள்ளும்"**

(சிலம்பு.காடுகாண்.பா:63-64)

மேற்கண்ட அடிகளால் அறியலாம். மேலும் சாமி சிதம்பரனார் பாலைநிலத்தைப் பற்றி கூறுகையில் "நான்கு நிலங்களிலும் மழை வளங் குறைந்தால் நிலவளம் பாழ்பட்டால் ஒன்றும் விளையாத வறண்ட நிலமாக மாறினால் அது பாலை நிலமாகும்" (பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும்,பக்.247)

என்கிறார். இந்நிலத்தில் ஒரே வெப்பமாகவும், மழை இல்லாததால் மக்கள் அவ்வூரைவிட்டு வெளியேறியதை,

“இடி உமிழ் வானம் நீங்கி,யாங்கணும்

குடி பதிப்பெயர்ந்த சுட்டுடை முதுபாழ்” (அகம்.பா.77:05:06)

மேலும் அங்கு இருக்கும் இத்தி மரத்தின் நிழலிலும் வெயில் காற்று வீசுவதையும், இருள் வரும் மாலைப் பொழுதிலும் வெப்பத் தாக்கம் இருப்பதை

“.............................. சீறூர்ப்

புல் அரை இத்திப் புகர் படுநீழல்

எல் வளி அலைக்கும், இருள் கூர் மாலை” (மேலது.:12-14)

மேற்கண்ட அடிகளால் பாலைநிலத்தின் கொடுமையை அறியமுடிகிறது.

## பாலை நிலத்தொழில்கள்

நிலத்தொழில்களுக்கு அடிப்படையாக அமைவன நிலைப்பாங்கே ஆகும். வன்புலமாகிய குறிஞ்சியும் முல்லையும் பருவமாற்றத்தால் தொழிலுக்கு ஏற்றநிலையில் இல்லாததால் இந்நிலமக்கள் களவுத்தொழிலிலும், கொலைத்தொழிலிலும் ஈடுபட்டதை அறியமுடிகிறது.

## களவுத்தொழில்

வழிச்செல்வோரிடம் பொருளைக் கவர்ந்து அப்பொருளின் வழி வாழ்க்கை நடத்துபவர்கள் பாலைநிலமக்கள் ஆவார். இவர்கள் இத்தொழிலை செய்ய நிலமே அடிப்படைகாரணமாக அமைந்தது. அவ்வாறு பயனற்ற நிலத்தில் உழுதலை விட்டு களவுத் தொழிலில் ஈடுபட்டதை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்த சான்று,

“.............................. களவுநீக்கியும்” (பட்டின.அடி.199)

“வில்ஏர் உழவர் வெம்முனைச் சீறூர்” (நற்.பா.03:05)

ஏரால் உழுதலைவிட்டு, வில்லால் வழிச் செல்வோரின் மார்பை உழக் கூடியவர்கள் என்பதனை அறியமுடிகிறது. மேலும்

“.............................................கடுந் துடிக்

கொடுவில் எயினர் கோட் சுரம் படர” (அகம்.பா.79:13-14)

எயினர்கள் கொடிய வில்லை எடுத்துக் கொண்டு,

துடிப்பறையுடன் வேட்டைக்குச் செல்வர். மேலும்,

**"கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்"** (குறுந்.பா.12:03)

தங்களின் ஆயுதமான வில்லை பாறைகளில் தீட்டிக் கூர்மை செய்ததை அறியமுடிகிறது. மேலும் களவுத்தொழில் செய்யும் மறவர்கள் இரவில் துவர் நிறஆடையும், செவ்விய அம்பும் கொண்டு காத்திருந்ததை,

**"துவர்செய் ஆடைச் செந்தொடை மறவர்**
**அதர் பார்த்து அல்கும் அஞ்சுவரு நெறியிடை"** (நற்.பா.33:06-07)

மேலும் தலையில் வெண்ணிறப் பூக்களைச் சூடிக் கொண்டு வில்லை இடத்தோளில் மாட்டிக்கொண்டு வழிப்போக்கர் வருகைக்காக காத்திருந்ததை,

**"சுரிந்து வணர் பித்தைபொலியச் சூடி**
**கல்லாமழவர் வில் இடம் தழீஇ**
**வருநர்ப் பார்க்கும் வெருவருகவலை"** (அகம்.பா.127:14-16)

மேற்கண்ட அடிகளால் அறியலாம். மேலும்வழிப்போக்கர் யாரும் செல்லாததால் ஆறலைக் கள்வர்கள் கவலையில் இருந்ததை,

**"உகுநெல் பொரியும் வெம்மைய,யாவரும்**
**வழங்குநர் இம்மையின் வெளவுநர் மடிய**
**சுரம் புல்லென்றஆற்றஅலங்குசினை"** (அகம்.பா.01:12-14)

மேற்கண்ட அடிகளால் அறியலாம். மேலும் எயினர்கள் கொடிய வில்லை ஏந்திக் கொண்டு நெற்கூடுகளில் இருந்த நெல்லைத் திருடியதை,

**"கொடுவில் எயினர் கொள்ளை உண்ட"** (பட்டின.அடி.266)

மேற்கண்ட அடிகளால் அறியலாம். மேலும் காவல் மிகுந்த இடங்களில் இருந்து கன்றுகளோடு ஆநிரைகளை கவர்ந்துக் கொண்டுவந்த செய்தியை,

**"அடி புதைதொடுதோல் பறையஏகி**
**கடி புலம் கவர்ந்தகன்றுடைக் கொள்ளையர்**
**இனம் தலைபெயர்க்கும் நனந்தலைப் பெருக்காட்டு"**

(அகம்.பா.101:09-11)

மேலும் ஆநிரைகளைக் கவர்ந்துவரவாள், வில், அம்பு பயன்படுத்தியதை,

 மலர் 01, சிறப்பிதழ் 01/ISSN 2950-6611

**"வயவாள் எறிந்து,வில்லின் நீக்கி**
**பயம் திரைதழீஇயகடுங்கண் மழவர்**
**அம்புசேண் படுத்துவன்புலத்துஉய்த்தென"** (அகம்.பா.309:01-03)

மேற்கண்ட அடிகளால் அறியலாம்.மேலும் ஆநிரைகளைக் கவர்ந்து வந்த செய்திக்கு வலுச்சேர்க்கும் வகையில்

**"வீளைஅன்பின் விழுத்தொடைமழவர்**
**நாள் ஆ உய்த்தநாமவெஞ் சுரத்து"** (அகம்.பா.131:06-07)
**"...............................முனை கடந்து**
**வீங்குமென் சுரையஏற்றினம் தரூஉம்**
**முகை தலைதிறந்தவேனில்"** (மேலது.பா.105:14-16)

மேற்கண்ட சான்றுகளின் அடிப்படையில் நோக்கும் போதுவேனில் காலத்தில் (வறட்சியில்) களவில் ஈடுபட்டதை அறியமுடிகிறது.

## கொலைத்தொழில்

திருக்குறளில் வள்ளுவர் கொலைத் தொழில் இருந்துள்ளதை,

**"கொலையில் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்**
**களைகட் டதனோடு நேர்"** (குறள்.550)

இக்குறளுக்கு குன்றக்குடி அடிகளார் உரை கூறுகையில் "அரசன் கொலையிலும் கொடியவராக விளங்குபவரை மிக கடுந்தண்டனையால் துன்புறுத்துதல், கழனியில் களைபிடுங்கி எடுத்துப் பயிரை பாதுகாப்பதற்கு நிகரானது" என்கிறார். (குன்றக்குடி அடிகளார் திருக்குறள் உரை,பக்,166) மேலும் "அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்றுகொல்லும்" என்ற முதுமொழியும் கொலைத்தொழில் இருந்துள்ளதை பறைசாற்றுகிறது. அக்காலத்தில் அரசாட்சி முறையில் கடுந்தண்டனையாக கொலைத்தண்டனை விதிக்கப்பட்டதை அறியமுடிகிறது. மேலும் சங்க இலக்கியத்தில் நன்னன் என்ற குறுநில அரசன் பெண் கொலை புரிந்ததை,

**"மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை**
**புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு**
**ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள்நிறை**
பொன்செய் பாவை கொடுப்பவும்" (குறுந்.பா.292:01-04)

மலர் 01, சிறப்பிதழ் 01/ISSN 2950-6611

மேற்கண்ட அடிகளின் வாயிலாக பெண் ஒருத்தி, நீராடு துறையில் நீருடன் வந்த மாங்காயைத் தின்றதாகிய குற்றத்திற்கு, அப்பெண்ணின் தந்தை எண்பத்தொரு ஆண்யானைகளோடு, அவளது எடைக்கு நிகராக பொன்னால் செய்த பாவையைக் கொடுக்க அதை ஏற்கமறுத்து பெண்கொலை புரிந்ததை,

**"பெண்கொலை புரிந்த நன்னன் போல"** (மேலும்.பா.292:05)

இவ்வாறு சங்ககாலம் தொட்டே கொலைத்தொழில் இருந்துள்ளதை அறியமுடிகிறது. மேலும் ஆறலைக்கள்வர் வழிப்போக்கரை அம்பினால் கொலைசெய்ததை,

**"செங்கோல் வாளிக் கொடுவில் ஆடவர்**
**வம்பமாக்கள் உயிர்த்திறம் பெயர்த்தென"** (நற்.பா.164:06-07)

**"கொலைவெங் கொள்ளைக் கொடுந்தொழில் மறவர்"**
(அகம்.பா.363:10)

**"கொலை கடித்தும்..........."** (பட்டின.அடி.199)

மேலும் வழிப்போக்கரை கொன்று வீழ்த்திய இடத்தில் சிதறிக்கிடக்கும் குருதியினை பருந்து எடுத்துச் சென்று தன் குஞ்சுகளுக்கு ஊட்டியதை,

**"பொருகளத்துஒழிந்தகுருதிச் செவ்வாய்**
**பொறித்தபோலும் வால் நிறஎருத்தின்**
**அணிந்தபோலும் செஞ்செவி,எருவை**
**குறும்பொறைஎழுந்தநெடுந்தாள் யாஅத்து**
**அருங்கவட்டுஉயர்சினைப் பிள்ளைஊட்ட"** (அகம்.பா.193:04-08)

மேற்கண்ட அடிகளால் பாலை நிலத்தில் கொலை செய்யப்பட்டதை அறியமுடிகிறது.

## வழிபாடு

நிலஞ்சார் அடிப்படையில் கொற்றவை பாலைநிலக் கடவுளாக கருதுகின்றனர். ஆனால் தொல்காப்பியர் புறத்திணையில்,

**"மறங்க கூட்டிய துடிநிலை சிறந்த**
**கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே"**

(தொல்.பொருள்.நூ.04)

நில அடிப்படையில் கூறாமல் போர்க்களத்தின் வெற்றித் தெய்வமாகக் கூறியுள்ளார். மேற்கண்ட இதே செய்தியை

முருகனைக் காதலர்களின் கடவுள் என்றது போலவே "கொற்றவை போர்க்கடவுளாகக் காட்டப்படுகிறாள்" (பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள், பக்.106) என்கிறார் அ. கா. பெருமாள்

மேலும் கொற்றவை பழமையான தெய்வம் என்பதனை,

> **"வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!**
> **இழையணி சிறப்பின் பழையோள் குழவி!"** (திருமு.அடி:258:259)

மேலும் கொற்றவை புகழ் பெற்ற காட்டுத்தெய்வம் என்பதனை,

> **"கான் அமர் செல்விஅருளலின்......"** (அகம்.பா.345:04)

மேலும் காட்டில் உறையும் தெய்வம் என்பதனை,

> **"காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றைப்"** (பொருந.அடி:52)

மேலும் பெண்கள் கையில் காப்புக்கட்டி கொற்றவையை வழிபட்டதை.

> **"விடர்முகை யடுகத்து விறல்கெழு சூலிக்குக்**
> **கடனும் பூணாங் கைந்நூல் யாவாம்"** (குறுந்.பா.218:01-02)

மேற்கண்ட அடியில் கொற்றவைக்கு தலைவன் தன்னை மறந்ததால் காப்புக் கட்டமாட்டேன், கடன் செலுத்தமாட்டேன் என தோழியிடம் கூறுகிறாள். "காப்புநூல் கையிற்கட்டிக் கோடல், தலைவனைப் பிரிந்த துரையும் மகளிர் நோன்பு மேற்கொண்டு கைந்நூல் யாத்தல் மரபு" *(சோமசுந்தரனார் உரை, குறுந்தொகை, பக்.318)*

மேலும் கொற்றவைக்கு இரத்தக் காவுகொடுத்ததை,

> **"தெய்வம் சேர்ந்தபராரைவேம்பில்**
> **கொழுப்பு ஆ எறிந்து,குருதி தூஉய்**
> **புலவுப் புழுக்குஉண்டவான் கண் அகல் அறை"**
>
> (அகம்.பா.309:04-06)

மேற்கண்ட அடிகளால் பசுக்களை பழிக் கொடுக்கப் பட்டதை அறியமுடிகிறது.

## நடுகற்கள்

தன் ஊருக்காகவோ அல்லது தம் மக்களுக்காகவோ பகைவரிடம் போர் செய்து களத்தில் மாண்டவனுக்கு, அவன் நினைவாக ஊர்ப்பொது இடத்தில் மிக நெடியதொரு

கல்லை செங்குத்தாக நிறுத்தி வைப்பது நடுகல் எனப்படும். இவ்வாறாக தன்னலம் கருதாமல் பிறர் நலன் கருதி உயிர் நீத்தவர்களுக்கு நடப்பட்ட கல்லை தெய்வமாக வழிபடவும் செய்தனர். அவ்வாறு தெய்வமாக வழிபட்ட நடுகற்கள் வெயிலாலும், மழையாலும் பாதிக்கப்படாத வண்ணம் கூரைவேய்ந்ததை,

**“மடம்சால்.....................சூட்டி”** (புறம்.பா.260:26)

இவ்வாறாக மெல்ல மெல்ல நடுகற்கள் வழிபாடு கோவிலாக உருமாறினர். என்கிறார்கள் வரலாற்று ஆய்வாளர்கள். இந்நடுகற்கள் பற்றியசெய்திகள் ஏராளமானவை பாலை நிலவழிகளில் தான் அதிகம் காணப்படுகிறது. “நடுகல் என்பது பெருங்கல் பண்பாட்டுக் காலத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த சங்ககாலத்திலும் பெருவழக்கமாகத் திகழ்ந்த சவ அடக்க முறையைக் குறிக்கலாமென்று தோன்றுகிறது” (தொல்லியல் ஆய்வுகள், பக்.71) என்கிறார் கே.வி.இராமன்.

மேலும் நடுகல் பற்றிய செய்தியை தொல்காப்பியர் புறத்திணையில்,

**“காட்சி கால்கோள் நீர்ப்படை,நடுகல்**
**சீர்த்தகு மரபின் பெரும்படை வாழ்த்தல் என்று**
**இருமூன்று வகையிற் கல்லொடு புணர”** (தொல்.பொருள்.நூ.05)

மேற்கண்ட நூற்பாவுக்கு உரை கூற வந்த தமிழண்ணல் “இறந்த பெரு வீரனுக்குக் கல்லெடுக்க முதலிற் கல்தேடிக் காணுதல்,தேர்ந்தெடுத்தல், அதனை நடுதற்கு முற்படச்செய்யத் தகுவன யாவும் செய்தல். அக்கல்லைப் புனிதநீராட்டுதல், தக்க இடத்தில் நடுதல், சிறப்பு மிக்க பெரிய படையலிடுதல், வாழ்த்திவணங்குதல்” (தமிழண்ணல் உரை,தொல்காப்பியம் பொருளதிகாரம்,பக்.54)

மேலும் நடுகல்லில் வீரனின் பெயரையும்,பெருமையும் பொறிக்கப்பட்டிருந்ததை,

**“விழுத்தொடை மறவர் வில்இட வீழ்ந்தோர்**
**எழுத்துடை நடுதல் இன்நிழல் வதியும்**
**அருஞ்சுரக் கவலை நீந்தி”** (அகம்.பா.53:10-12)

மேற்கண்ட அடிகளில் வழிப்பறிக் கள்வரால் இறந்துபட்டவர்களின் உடல்கள் புதைக்கப்பட்ட இடத்தில்

அச்சம் தரக்கூடிய நடப்பட்ட எழுத்துடைய நடுகற்கள் பாலைநிலத்தில் இருந்ததை அறியமுடிகிறது. மேலும் மேற்கண்ட பாடலுக்கு வலுச் சேர்க்கும் வகையில்,

**''பெயரும் பீடும் எழுதி,அதர்தொறும்**

**பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்**

**வேல்ஊன்று பலகைவேற்று முனை கடுக்கும்''**

(அகம்.பா.67:09-11)

மேற்கண்ட அடிகளால் அறியலாம்.

மேலும்,சங்க இலக்கிய பாடல்களுக்கு வலுச் சேர்க்கும் வகையில், எழுத்துடை நடுகல் புள்ளிமான் கோம்பையில்,



(கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்துடை நடுகல்)

மேலும்,

**''விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்**

**எழுத்துடைநடுகல்''** (ஐங்.பா.352:01-02)

மேற்கண்ட அடிகளில் மறவர்களின் வில்லம்பால் மாண்டவர்களுக்கு பெயர் பொறித்த நடுகல் நடப்பட்டதை அறியமுடிகிறது. மேலும்

''செல்லா நல்லிசை பெயரொடு நட்ட

கல் ஏசு கவலை எண்ணுமிக பலவே'' (மலை.அடி.388-389)

பலரும் செல்லக்கூடிய வழியில் நடுகல் நட்டு, அவற்றில் அவனது பெயரையும் புகழையும் பொறித்தனர் என்பதனை அறியமுடிகிறது. மேலும்

**"நடுகல் கைதொழுது பரவும்"** (புறம்.பா.306:04)

**"புடை நடுகல்லின் நாட்பலியூட்டி**
**நல்நீராட்டி,நெய்ந் நறைக் கொளீஇய**
**மங்குல் மாப் புகை மறுகுடன் கமழும்"** (புறம்.பா.329:02-04)

மேற்கண்ட அடிகளால் நடுகல்லை நீராட்டி பின் நெய்யிட்டு விளக்கேற்றி நறுமணப்புகையுடன் வழிபட்டதை அறியமுடிகிறது. மேலும் நடுகற்கள் உயர்ந்து காணப்பட்டதை,

**"நட்டபோலும் நாடஅநெடுங் கல்**
**அகல் இடம் குயின்றபல் பெயர் பண்ணி"** (அகம்.பா.269:07-08)

மேற்கண்ட அடிகளால் அறியலாம். மேலும் ஆநிரையை மீட்டு வந்த மறவர்கள் நடுகளுக்கு நன்றி கூறும் வகையில் மயில்தோகைசூட்டி, படையல்போட்டு, பலிக் கொடுத்து இசைக்கருவிகள் முழங்க வழிபாடு செய்ததை,

**"......................கடவுள் பேண்மார்**
**நடுகல் பீதிசூட்டித் துடிப்படுத்துத்**
**தோப்பிக் கள்ளொடுதுரூஉப் பலி கொடுக்கும்"**

(அகம்.பா.35:07-09)

மேற்கண்ட அடிகளால் அறியலாம்

"தொண்டை மண்டலத்திலே கிடைக்கின்ற வீரக்கற்கள் எல்லாம் சண்டை, ஆநிரைகவர்தல் போன்றவற்றில் உயிர்க் கொடுத்த வீரர்களுக்காக எழுப்பப்பட்டனவாகும்" (தொல்லியல் ஆய்வுகள்,பக்.73) மேலும் ஒருவன் ஆநிரை மீட்டுத் தந்து விழுப்புண் பட்டு இறந்து நடுகல்லாகி நிற்பதை பாணன் கூறியதை,

**"கம்பமொடு துளங்கிய இலக்கம் போல**
**அன்பொடு துளங்கி ஆண்டு ஒழிந்தன்றே**
**உயர் இசைவெறுப்பத் தோன்றிய பெயரே"** (புறம்.பா.260:23-25)

மேலும் நடுகல் ஆனது கம்பமாக உயர்ந்து நின்றதையும், அவற்றில் அவன் பெயரையும்எழுதிஇருந்ததை அறியமுடிகிறது. மேற்கண்ட சங்க இலக்கிய பாடல்களுக்குச் சான்றாக,



(திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டம், பல்லா கவுண்டன் பாளையம் அருகே உள்ள குமரிகல் பாளையத்தில் பழமையான நடுகல்லை கன்னிமார் தெய்வமாக கிராம மக்கள் வழிபட்டு வருகின்றனர்.)

"கொல்லப்பட்டவரின் உடம்பின் மேல் தழைகளை அடையாளமாகப் போடுவது பின்னர் அதே இடத்தில் கல் நடுவது என்பது மரபு" (பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள், பக்.107) அ.கா.பெருமாள் கூறுகிறார்.

## தொகுப்புரை

- தமிழகத்தின் எல்லையும், தமிழகத்தின் நிலங்களையும், அறிஞர்களின் சான்றுகளோடு ஆராய்ந்து பின்னர் மழைவளம் பாழ்பட்டால் பாலை நிலம் தோன்றும் என்பது ஆராயப்பட்டுள்ளது.
- பாலை நிலமக்கள் களவுத் தொழில், கொலைத் தொழிலில் ஈடுபடக் காரணம் நிலப்பாங்கே முதன்மைக் காரணமாக அமைவதையும், மேலும் இத்தொழிலுக்கு ஆயுதமாக வில் அம்பு, வாள் முதலியன பயன்படுத்தியதை அறியமுடிகிறது. மேலும் அவ்வாயுதத்தை பாறைகளில் தீட்டி கூர்மை செய்ததை அறியமுடிகிறது.
- மேலும் வழிப்போக்கரை எதிர்பார்த்து இருந்ததை அறியமுடிகிறது. வழிப்போக்கரை அம்பினால் கொலை செய்ததையும் அறியமுடிகிறது.
- பாலை நிலத்தெய்வமாக கருதப்படும் கொற்றவையை வெற்றி தெய்வமாக வழிபட்டதையும், கொற்றவை

பழமையான தெய்வம், காட்டில் உறையும் கடவுள் என்பதனை அறியமுடிகிறது.

- கொற்றவை வழிபாடானது காப்புக்கட்டி, நோன்பு மேற்கொண்டு, பலிக்கொடுத்து வழிபட்டதை அறியமுடிகிறது
- நடுகற்கள் பெரும்பாலும் பாலை நிலத்திலே காணப்பட்டதையும், விழுப்புண்பட்டு இறந்தவனுக்கு நடுகல் நட்டு வழிபட்டதை அறியமுடிகிறது.
- பாலை நிலமக்கள் வழிப்பறியில் ஈடுபட்டு கொலை செய்து அவர்களுக்கு நடுகற்கள் நட்டப்பட்டதை அறியமுடிகிறது. மேலும் அந்நடுகற்கள் உயர்ந்து காணப்பட்டதையும், இறந்தவனின் பெயரையும், பெருமையும் பொறிக்கப்பட்டிருந்ததை அறியமுடிகிறது.
- நடுகற்களுக்கு மயில் தோகையால் அலங்காரம் செய்து, படையல் போட்டு, பலிக் கொடுத்து, இசைக்கருவிகள் முழங்க வழிபாடு செய்ததை அறியமுடிகிறது.துணைநூல் பட்டியல்

## முதன்மைச் சான்றாதாரம்

சங்க இலக்கிய நூல்கள்

## துணைமைச் சான்றாதாரம்

1. இராமன்.கே.வி, (2015). தொல்லியல் ஆய்வுகள், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
2. சோமசுந்தரனார். பொ.வே, (உரையாசிரியர்) (1961). குறுந்தொகை, திருநெல்வேலி: சைவ சித்தாந்த நூற்பதிப்புகழகம்
3. தமிழண்ணல் (உரையாசிரியர்) (2010). தொல்காப்பியம் பொருளதிகாரம் - (தொகுதி1) , சிந்தாமணிசெல்வம்
4. தவத்திரு. குன்றக்குடி அடிகளார் (உரையாசிரியர்), (2005). திருக்குறள் உரை, குன்றக்குடி: அருள்நெறிப் பதிப்பகம்
5. பரமேஸ்வரி.த (பதிப்பாசிரியர்), (2015). உரைக் கதம்பம், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்
6. பெருமாள். அ.கா, (2018). பழந்தமிழர் வழிபாட்டுமரபுகள், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்

***